<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 18/2018

| | |
|---|---|
| Deposition of Witness | : PW –1 |
| Name | : விஜயன் (வயது 57) |
| Father's Name /W/o | : த/பெ. பொன்னுரங்கம் |
| Religion | : இந்து |
| Caste | : – |
| Calling | : – |
| Address | : வளர்ப்புரம் |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 28.04.2025.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் உட்பட 11 வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள். நான் இந்த வழக்கில் எத்தனையாவது வாதி என்றால் 7 வது வாதி ஆவேன். இந்த வழக்கில் 1 மற்றும் 2 வது வாதி ஏற்கனவே 7 வது பிரதிவாதியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதன் அசல் வழக்கு எண்.105/2008 என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் 6வது பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்.105/2008 மற்றும் தற்போதைய வழக்கு ஒரே தாவா சொத்து அட்டவணை என்றால் சரிதான்.

2. தற்போதைய வழக்கில் 3 முதல் 11 வரை உள்ள வாதிகள் அசல் வழக்கு எண்.105/2008 பிரதிவாதிகள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 2 வது பிரதிவாதி தான் தற்போதைய வழக்கில் 7 வது பிரதிவாதி என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.105/2008 22.08.2017 தேதியில் இந்நீதிமன்றத்தால்

தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு 1 வது, 2 வது பிரதிவாதியான தூர்வாசலு மற்றும் கஜேந்திரன் மேல்முறையீடு செய்தார்கள் என்றால் சரிதான். மேல்முறையீடு வழக்கு எண். 24/2018 இந்நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணை செய்ய கோரி மாண்புமிகு சார்பு நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். எனவே அசல் வழக்கு எண்.105/2008 இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதா என்றால் சரிதான்.

3. அசல் வழக்கு எண்.105/2008 6 வது பிரதிவாதியாக இருந்த நான் அவ்வழக்கை மறைத்து தற்போதைய வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. இரண்டு வழக்கிலும் ஒரே அட்டவணை சொத்து என்பதால் நான் வேண்டுமென்றே மறைத்து சட்டத்திற்கு முரண்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்த இந்த வழக்கு சட்டத்திற்கு முரண்பாகவும், உண்மைக்கும் முரண்பாகவும் மற்றும் எதிரானது என்றால் சரியல்ல.

4. இரண்டு வழக்கும் ஒரே அட்டவணை சொத்து ஆனால் வேறு வேறு பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனவே தற்போதைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தற்போதைய வழக்கில் வாதிகள் 1, 6 முதல் 9 ஆகியோவர்களின் தந்தைமை தன்மை குறித்த ஆவணங்கள் ஏதேனும் இதுவரை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் வாதிகள் 2, 4, 5, பிரதிவாதி 7 மற்றும் வாதிகள் 10, 11 ஆகியோரின் தாய் மற்றும் 3 வது வாதியின் மனைவி ஓயாமணி இறந்த பொன்னுரங்கம் என்பவருடைய வாரிசுகள் என்று வழங்கப்பட்டுள்ள சான்றுகளை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வாரிசுகள் பொன்னுரங்கத்தின் வாரிசு என்று பொன்னுரங்கத்தின் வாரிசு சான்றிதழிதல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் 2வது அட்டவணை சொத்து குறித்து 7வது பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளதா என்றால் சரியல்ல மோசடியாக 7வது பிரதிவாதி பட்டா வாங்கியுள்ளார்.

5. வழக்கு சொத்தில் வாதிகள் 1, 6 முதல் 8 ஆகியோருக்கு வழக்கு சொத்தில் உரிமை இல்லை என்றாலும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)